**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**
**அசல் வழக்கு எண். 46/2024**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை திரு/திருமதி.நாட்ராயன் என்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நாட்ராயன் | தொழில் | : |
| தந்தை / கணவர் பெயர் | : | ராமசாமி | வயது | : |
| கிராமம் | : | | | : |
| தாலுக்கா | : | | | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை :**

நான் இந்த அசல் வழக்கின் பிரதிவாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

01.02.1990ம் தேதியிட்ட பொன்னுசாமி மற்றும் ஒருவர் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவண எண்.177/1990 சார்பதிவாளர் அலுவலகம் சிவகிரி சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1,** 15.09.1995 ம் தேதியிட்ட கொழந்தசாமிகவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.2463/1995 சார்பதிவாளர் அலுவலகம் அவல்பூந்துறை) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2,** 14.06.1996 ம் தேதியிட்ட ஆர். குணசேகரன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் ) ஆவண எண்.746/1996 சார்பதிவாளர் அலுவலகம் சிவகிரி) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3,** 26.02.2003 ம் தேதியிட்ட முத்துலட்சுமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.271/2003 சார்பதிவாளர் அலுவலகம் சிவகிரி ) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4,** 24.11.2003ம் தேதியிட்ட வாதியின் கணவர் ஞானராஜ் பெயரில் உள்ள கிரைய ஆவணம் ( ஆவண எண்.1439/2003 சார்பதிவாளர் அலுவலகம், சிவகிரி) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5,** 01.11.2006 ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள கியைர ஆவணம் (ஆவண எண்.1720/2006 சார்பதிவாளர் அலுவலகம் சிவகிரி ) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6,** புகைப்படம் அசல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.08.06 18:36:53 +0530